දුරකථන
தொலைபேசி
Telephone
) 0112669192 ,0112675011
0112698507 ,
0112694033
) 0112675449 ,0112675280

ෆැක්ස්
பெக்ஸ்
Fax
) 0112693866
) 0112693869
)0112692913

විද්‍යුත් තැපැල
மின்னஞ்சல் முகவரி
e-mail
)postmaster@health.gov.lk
)

වෙබ් අඩවිය
இணையத்தளம்
website
) www.health.gov.lk
)

සුවසිරිපාය
சுவசிரிபாய
**SUWASIRIPAYA**

සෞඛ්‍ය අමාත්‍යාංශය
சுகாதார அமைச்சு
**Ministry of Health**

මගේ අංකය )
எனது இல )
My No. )CF/EXH/ 07/2021

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி )2022/01/21
Date )

---

பொது சுற்றுநிருப கடித இலக்கம் : 02-04/2022

மாகாண சுகாதார செயலாளர்கள்,
பிரதிப் பணிப்பாளர் நாயகம் - இலங்கைத் தேசிய வைத்தியசாலை
மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்,
மத்திய அரசின் கீழ் நிர்வகிக்கப்படும் சகல வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள்,
பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்.
உரிய நிறுவனத் தலைவர்கள்,

**சுகாதார அமைச்சின் (MT – 06) சம்பள அளவுத்திட்டத்துக்குரிய துணை மருத்துவ சேவைக்குரிய பாடசாலை பல் சிகிச்சையாளர் Iஆம் தர உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமை காண் தடைப்பரீட்சை – 2021**

பாடசாலை பல் சிகிச்சையாளர் சேவையில் Iஆம் தர உத்தியோகத்தர்கள், தரம் I ற்கு இணைக்கப்பட்டு 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் சித்தியடைய வேண்டிய வினைத்திறமை காண் தடைப் பரீட்சை 27.03.2022 ஆம் திகதி சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் நடாத்தப்படும் என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது. பரீட்சை நடைபெறும இடம், நேரம் என்பன பரீட்சை அனுமதி அட்டையில் குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்படும்.

**02 தகைமைகள்**

பாடசாலை பல் சிகிச்சையாளர் சேவையில் தரம் I யிற்கு நியமனம் பெற்றுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் மூன்றாம் பந்தியில் குறிப்பிடப்படும் ஒழுங்குமுறைகளுக்கமைய இப்பரீட்சையிலிருந்து விடுவிக்கப்படும் உத்தியோகத்தர் அல்லாத மற்றைய உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.

**03 வினைத்திறமைக்கான் தடைப்பரீட்சையில் இருந்து விடுவித்தல்**

அரசாங்க நிருவாக சுற்று நிருப இல: 6/2006 இன் பிரகாரம் 2016.09.27 ஆம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அனுமதி வழங்கப்பட்டுள்ள புதிய ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பிரகாரம் 2016.09.27 ஆம் திகதி I ஆம் தரத்தில் 05 வருட திருப்திகரமான சேவைக்காலத்தினை நிறைவு செய்துள்ள உத்தியோகத்தர்கள் மூன்றாவது வினைத்திறமைக்காண் தடைப்பரீட்சையினை பூர்த்தி செய்ய வேண்டிய அவசியத்திலிருந்து விடுவிக்கப்படுகின்றனர்.

கவனிக்கவும் : 25.02.2022 ஆம் திகதி தரம் Iற்கு பதவி உயர்வு பெற்று உரிய நியமனக் கடிதம் கிடைக்கப்பெற்ற உத்தியோகத்தர்களது விண்ணப்பங்களை மாத்திரம் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கவும்.



385, පූජ්‍ය බද්දේගම විමලවංශ හිමි මාවත, කොළඹ 10. 385, வணக்கத்துக்குரிய பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10.
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha, Colombo 10, Sri Lanka.

04 விண்ணப்பங்கள்

இச் சுற்று நிருபத்தின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் தங்களினுடைய திணைக்களத் தலைவரின் ஊடாக பணிப்பாளர் (பரீட்சைகள்), சுகாதார போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு, "சுவசிரிபாய" , இலக்கம் - 385, வணக்கத்திற்குரிய பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு - 10 என்னும் முகவரிக்கு 25.02.2022 ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டுள்ள அனைத்து தகவல்களும் சரியானவை என திணைக்கள தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டு இருக்க வேண்டும். தங்களது விண்ணப்பப் பத்திரத்துடன் விண்ணப்பதாரியின் அலுவலக முகவரி அல்லது தனிப்பட்ட முகவரியினையிட்டு ரூபா. 45.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட கடித உறைகள் 02 இனையும் (இதில் விண்ணப்பதாரி தனது சொந்த முகவரியினையோ,அல்லது அலுவலக முகவரியினையோ குறிப்பிடலாம்) இணைத்து அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்ப முடிவுத்திகதிக்கு பின்னராக கிடைக்கும் விணணப்பஙகள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிப்படும்.

**விண்ணப்பமானது A4 தாளின் இருபக்கங்களினையும் பயன்படுத்தி தயாரிக்கப்படவேண்டும். முதலாவது பக்கத்தில் 01 - 04 வரையான விபரங்களும், இரண்டாவது பக்கத்தில் 05 - 08 வரையான விபரங்களும் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும்.**

05 பரீட்சைக் கட்டணம்

I முதன் முறையாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கட்டணங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனைய விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு விடயத்திற்கும் ரூபா.25 வீதம் இரத்துச் செய்யப்படாத முத்திரையினை ஒட்டி அதன் மீது தமது கையொப்பத்தினை இட்டு இரத்துச் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II எக் காரணத்தினைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணமானது வேறு பரீட்சைகளின் பொருட்டு மாற்றப்படுதலோ, அல்லது மீளப் பெறுதலோ மேற்கொள்ள இடமளிக்கப்படமாட்டாது.

06 பரீட்சையின் பொருட்டு உட்படுத்திக் கொள்ளுதல்

I ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் பொருட்டு விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்படும். அப் பரீட்சை அனுமதிப் பத்திரத்தினை உரிய முறையில் பூரணப்படுத்தி பரீட்சை குழுவின் தலைவரிடம் கையளிக்க வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லையாயின் பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

II பரீட்சையின் பொருட்டு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளின் பொருட்டு பரீட்சைக் குழுவின் தலைவருக்கு தங்களினது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுவதன் பொருட்டு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றினை கொண்டு வருதல் வேண்டும்.

(அ) தேசிய அடையாள அட்டை
(ஆ) திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை
(இ) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்
(ஈ) செல்லுபடியான கடவுச் சீட்டு

07 பரீட்சை திட்டம்

வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையானது விடயம் தொடர்பான கட்டுரை வடிவிலான வினாப்பத்திரமாகும். 08 வினாக்களில் 05 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வேண்டும். நேரம் 03 மணித்தியாலமாகும்.. மொத்தப் புள்ளிகள் 100. சித்தியடைவதன் பொருட்டு ஆகக் குறைந்தது 40 புள்ளிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இவ்விடயங்களில் சித்திபெற தவறும் பட்சத்தில் பின்னர் மற்றுமொரு சந்தர்பத்தில் பூர்த்திசெய்யப்படும்.


385, පූජ්‍ය බද්දේගම විමලවංශ හිමි මාවත, කොළඹ 10. 385, வணக்கத்துக்குரிய பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10.
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha, Colombo 10, Sri Lanka.

08 பரீட்சை விடயப் பாடப்பரப்பு

**விடயம் தொடர்பான அமைப்புக் கட்டுரை (பாடத்திட்டம்)**

- கள பல் வைத்தியர்களுடன் தொடர்பான நிலையான அறிவுரைகள், இதற்கு நிதிப்பிரமாணம் மற்றும் சுகாதார திணைக்கள கைநூல் முதலாம் பாகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடுமுறை, கடிதப் பரிவர்தனை மற்றும் பொருட் பட்டியல் ஆவணங்களை பேணுதலுடன் தொடர்பான விதிகள்.
- துறைசார்ந்த வேறு விதிமுறைகள் தொடர்பான விடயங்கள் உள்ளடங்கும்,
- நடைமுறையில் இருக்கும் பல் விஞ்ஞானம், பல் கழற்றல் செயற்பாடுகளுடன் தொடர்பான விரிவான அறிவு
- ஆரம்ப சுகாதார பராமரிப்பு தொடர்பான விரிவான அறிவு
- பொதுசன சுகாதாரம் தொடர்பான அறிவு
- பல் கட்டுவதிலுள்ள அடிப்படை குறைபாடுகளை கண்டறிவதற்கான அறிவு
- பற் சுகாதாரம் பற்றிய அறிவு
- முதலுதவி தொடர்பான அறிவு

09 **பரீட்சை தொடர்பான ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்தல்.**

பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினை பார்த்து எழுதுதலும் தடைசெய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவிசெய்தலை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல், இலத்திரணியல் உபகரணங்களை பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்தி மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

10 தயவு செய்து இச்சுற்று நிருபத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை உங்களது பிரிவில் / விஷேட இயக்கத்தில் / நிறுவனத்தில் கடமையாற்றும் அனைத்து பாடசாலை பல் சிகிச்சையாளர் சேவையில் வகுப்பு II 'ஆ' பிரிவு / தரம் III உத்தியோகத்தர்களுக்கு அறிவிப்பதற்கான ஒழுங்கினை மேற்கொள்ளவும். இந்த விபரங்களை www.health.gov.lk என்னும் இணையத் தளத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

**கவனிக்கவும் (சிங்களம், தமிழ், ஆங்கில மொழியிலான சுற்றுநிருபங்களுக்கிடையே ஏதாவது வேறுபாடுகள் காணப்படுமாயின் சிங்கள மொழியிலான சுற்றுநிருபமே வலுவுடையதாகும்.**

**ஷாமிக எச் கமகே**
**பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) 02**
**செயலாளருக்காக**
**சுகாதாரம அமைச்சு**

**Chamika H. Gamage**
Deputy Director General (Administration) II
Ministry of Health
"Suwasiripaya"
Colombo 10.

EXH

அலுவலக உபயோகத்தின் பொருட்டு

## மாதிரி விண்ணப்பப் படிவம

**சுகாதார அமைச்சின் (MT – 06) சம்பள அளவுத்திட்டத்துக்குரிய துணை மருத்துவ சேவைக்குரிய பாடசாலை பல் சிகிச்சையாளர் Iஆம் தர உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமை காண் தடைப்பரீட்சை – 2021**

01 (அ) (i) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (தமிழில்) :

.......................................................................................................................................

.......................................................................................................................................

(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில் எழுதவும்) :

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |

(iii) முதல் எழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் (தமிழில்) ..........................................

.......................................................................................................................................

(iv) முதல் எழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் : (ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில்)

| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) (i) தரம் Iற்கு பதவி உயர்த்தப்பட்ட அல்லது உள்ளீர்ப்பு செய்யப்பட்ட கடித இலக்கம் மற்றும் திகதி : ..........................................................................................

(ii) தற்போது பெறும் வருடாந்த சம்பளம்: ..........................................................

(iii) தொலைபேசி இல:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(iv) தேசிய அடையாள அட்டை இல :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(v) மின்னஞ்சல் முகவரி : ..........................................................................

02 (அ) தற்போது சேவை புரியும் நிறுவனம் (தமிழில்) : ..........................................................

(ஆங்கிலத்தில்) ..........................................................

(ஆ) அது சொந்தமாகும் மாவட்டம்: ..........................................................................

(இ) அந்நிறுவம் சொந்தமாவது: மத்திய அரசிற்கு ☐

மாகாண சபைக்கு ☐

(ஈ) மாகாண சபையாயின் அதற்குரிய மாகாணம் : ..........................................................

(உ) பரீட்சை அனுமதி அட்டை அனுப்புவதன் பொருட்டு தெளிவாக விண்ணப்பதாரியினது முகவரியிடப்பட்ட 9”x4” அளவு ரூபா.45 பெறுமதியுடைய முத்திரை இடப்பட்ட கடித உறை **இரண்டு** இணைக்கப்பட்டு உள்ளதா? ..........................................................................

(ஊ) தபால் முகவரி (தமிழில்) : ..........................................................................

(உ) தபால் முகவரி (ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில்) : ..........................................

.......................................................................................................................................

03 பரீட்சைக்கு தோற்றவுள்ள மொழி (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்): ..........................................

04 (அ) இதற்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றியுள்ளீரா? ..........................................

(ஆ) அவ்வாறு தோற்றியிருந்தால் இம்முறை முத்திரை ஒட்டப்பட்டுள்ளதா?

| முத்திரைக் கூண்டு |
|---|
| |

05 **விண்ணப்பதாரியின் உறுதியுரை**

(i) இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என்றும் இப் பரீட்சைக்கு நான் முதற்தடவையாக தோற்றுவதனால் பரீட்சைக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்றும் / முதற் தடவை அல்லாத படியால் ரூபா…………….. பெறுமதியுடைய முத்திரை ஒட்டியுள்ளதாகவும் இம் முத்திரையானது விண்ணப்பப்படிவத்தில் ஒட்டி இரத்துச் செய்வதற்கு முன்னர் பாவிக்கப்படாத பெறுமதியுடைய முத்திரையெனவும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

(ii) சுகாதார திணைக்களத்தினால் பரீட்சைகள் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சட்ட திட்டங்களுக்கு அமைய செயற்படுவேன் என்றும், இப் பரீட்சை தொடர்பான பிரமாணங்களுக்கு அமைய நான் தகைமையற்றவனாக காணப்பட்டால் எனது பரீட்சார்த்தித் தன்மையினை இரத்துச் செய்தவற்கும் இது தொடர்பாக எடுக்கப்படும் எந்த தீர்மானத்திற்கும் இணங்குவேன் என்றும் இத்தால் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

திகதி : ………………………… ………………………………………

விண்ணப்பதாரியின் கையொப்பம்

---

06. **சுயவிபரக் கோவையினை கையாளும் விடய முகாமைத்துவ உதவியாளரின் சான்றிதழ்**

இவ் விண்ணப்பமானது விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் என்னிடம் பாரமளிக்கப்பட்டது என்றும், சுயவிபரக் கோவையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் சரியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும், இவ்விண்ணப்பப் பத்திரத்தின் பிரதி ஒன்று சுயவிபரக் கோவையில் கோவையிடப்பட்டுள்ளது என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : ………………………… ………………………………………

பெயர் மற்றும் கையொப்பம்

---

07. **திணைக்களத் தலைவரின் கையொப்பம்**

திரு/திருமதி/செல்வி* ……………………………………….. என்பவர் …………………………… உத்தியோகத்தராக எனது நிறுவனத்தில் பணிபுரிகிறார். என்றும் அவ் உத்தியோகத்தர் இப் பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறையென்பதால்/முதன்முறை அல்லாததால்* ரூபா…………….. பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும் / முத்திரை ஒட்ட அவசியமில்லை* எனவும் விண்ணப் பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவையில் உள்ள விபரங்களின் படி சரியானவைகள் எனவும், இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இவ்விண்ணப்பதாரருக்கு தகைமை உள்ளதெனவும் எனது முன்னிலையில் தனது கையொப்பத்தினை இட்டார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ………………………….. ………………………………………………

திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(இறப்பர் முத்திரை இடப்பட வேண்டும்)

---

08 **பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு / விசேட பிரிவின் தலைவரின் உறுதிப்படுத்தல்**

திரு/திருமதி/செல்வி/செல்வன் ……………………………………… என்பவர் எனது நிறுவனத்தில் ………………………….. உத்தியோகத்தராக பணியாற்றுகின்றார் என்னும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் சுயவிபரக் கோவைக்கு அமைய சரியானவையென்றும், இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரிய தகைமைகளினை இவர் பூத்தி செய்துள்ளார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: …………………………… ………………………………………………

பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு / விசேட பிரிவு
தலைவரின் கையொப்பம்
(இறப்பர் முத்திரை இடப்பட வேண்டும்)